
ஓம் விராட் விஷ்வப் பிரமனே நமக



முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் பத்மலிங்கம் சரஸ்வதி

(முன்னாள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# பூங்காவனம்

31.05.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நமக



முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# பத்மலிங்கம் சரஸ்வதி

(முன்னாள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# பூங்காவனம்

**31.05.2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



தெய்வத்துக்கு ஒப்பான எம் சரஸ்வதியே! உங்களால் உய்தோமம்மா உயர்ந்தோம் வாழ்ந்தோம் குறைவில்லா குணத்தால் முகம் மலர்ந்த உத்தமியே தங்கள் பிரிவு எங்களை தீப்பட்ட வீட்டில் பூச்சிகளாக்கி விட்டது. தாயே எங்குமாகின்ற உங்கள் கரம் இன்று உறங்கி விட்டதால் அங்கம் குறைந்தவர்களாய் தவிக்கின்றோம் அம்மா! அப்பா இல்லை என்ற கவலை மறக்க அம்மா உங்களை நினைத்தோம். நாம் கனவிலும் நினைக்காத விடயம் நினைக்கும் முன் வந்து விட்டதால் நினைவிளந்த முடங்களாய் தவிக்கின்றோம் அம்மா! உம்மை மறவோம் உங்களை நினைத்து உங்களுக்காக ஒரு நினைவு மலர்.

"பூங்காவனம்"
என்ற பெயருடன் படைக்கின்றோம்
ஏற்றிடுங்கள்
சரஸ்வதி தாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நமக



தோற்றம்
20.05.1943

மறைவு
30.04.2018

# அமரர்
# பத்மலிங்கம் சரஸ்வதி
## (பூங்காவனம்)

(முன்னாள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்)

### திதி வெண்பா

விளம்பி வருடத்து தோன்றிடு சித்திரை மாத
அபர பக்க பிரதனமயாம் நற்தி தியில் பெயர்
பூண்ட பத்மலிங்கம் சரஸ்வதியாம் பற்றறுத்தே
பரமனடி சேர்ந்தார் பார்விட்டு இந்நளளிதுவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலாற் கூப்பவர்தங் கை.

## தேவாரம்

இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதொழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருபெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ யருளிலை : யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வெண் றருள்புரி யாயே

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் அன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் : பெற்றார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாநில மகிழ்ச்சியின் மலர்ந்தார்

## திருப்புகழ்

உம்பர் தேனுமணிக்க கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்றி
இன்பரசத் தேபருகப் பலகாலும்
என்றனுயர்க் காதரவுந் றருள்வாயே
தம்பிதனக் காதலனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக் கன்றி நின்பதந்
தாங்களன் வெள்ளைஉள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசகமே ஏழும்அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள்
வாய்பங்கா சனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும்ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்அமுது
ஆர்ந்துஉன் அருள்கடலில்
குளிக்கும் படிக்குஎன்று கூடும்கொ
லோஉளம் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 3

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்துஅருள்
வாய்வட நூல்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர்செந் நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 4

பஞ்சப் பிதந்தர செய்யபொற்
பாதபங் கேருகம்என்
நெஞ்சத் தடத்துஅல ராததுஎன்
னேநெடுந் தாள்கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்செந்
நாவும் அகமும்வெள்ளைக்
கஞ்சத்து அவிசுஒத்து இருந்தாய்
சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொல் பனுவலும்யான்
எண்ணும் பொழுதுஎளிது
எய்தநல் காய்எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும்என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய்உளம் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே. 7

சொல்விற் பனமும் அவதான
மும்கவி சொல்லவல்ல
நல்வித்தை யும்தந்து அடிமைகொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்நளின ஆசனம்சேர்
செல்விக்கு அரிதுஎன்று ஒருகால
மும்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கு உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றம்என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலம் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பண்கண்ட அளவில் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடிஉண்
டேனும் விளம்பில்உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி ஸ்மரணை

வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

பக்தர் உம்மை அழைக்கின்றோம்!
விருப்பம் ஈடேற வேண்டும்!
பக்தி பலமுற வேண்டும்!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

துக்கம் போக்க வாரும் சாயி!
ஆனந்தம் அளிக்க வாரும் சாயி!
சேய் உமை அழைத்தேன் சாயி!
தாய் மனதோடு இளகுவாய் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

கீர்த்தனம் சாயி, பூஜை சாயி!
வாழ்வும் சாயி, வளமும் சாயி!
ஆனந்தம் சாயி, செல்வம் சாயி!
அற்புதம் சாயி, அபயம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

ஷீர்டி வாசி எங்கள் சாயி!
பக்தரின் இனிய அன்பர் சாயி!
கருணைக் கடலே எங்கள் சாயி!
அருள் பார்வை பாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

கிழக்கும் சாயி மேற்கும் சாயி!
வடக்கும் சாயி தெற்கும் சாயி!
எத்திசையில் நீ இருந்தாலும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிந்து சாயி, முஸ்லிம் சாயி!
ஜீவன் சாயி, யாத்திரை சாயி!
யேசு சாயி, குருநானக் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

தர்மம் சாயி! கர்மம் சாயி!
தியானம் சாயி! தானம் சாயி!
தூணிலும் சாயி! துரும்பிலும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

திருப்தி சாயி முக்தி சாயி!
பூமி சாயி ஆகாயம் சாயி!
சாந்தி சாயி ஓம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

சத்யம் சாயி, சிவம் சாயி!
சுந்தரம் சாயி, ஈச்வரன் சாயி!
இரக்கம் சாயி, எளியவர் சாயி!
அன்பு சாயி, அமைதி சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

சக்தி சாயி பக்தி சாயி!
சிவன் சாயி விஷ்ணு சாயி!
ப்ரஹ்மா சாயி பஞ்சபூதம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதியின் வாய் மொழிகள்

- ஆண்டாண்டு அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மாநிலத்தில்.
- நம்ப நட நம்பி நடவாதே.
- அன்பு வைத்தால் மோசம் பழகிப் பிரிவது துயரம்.
- சாய வேண்டிய நேரத்தில் கிடைக்காத தோள் கிடைத்தென்ன கிடைக்காமலென்ன.
- நான் வாழா விடின் - மற்றொருவனுக்குக் கொடு.
- ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.
- எதற்கும் கலங்காதே மகனே!
- காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
- ஒரு முறை தான் மரணம்.
- கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
- பிறருக்கு உதவி செய்.
- பொய் பேசாதே.
- பெரியோரை மதி.
- அள்ளிக் கொடுத்த கையில் கிள்ளிக் கொடுக்க முடியவில்லை.
- நல்ல சங்கீதத்தை ரசியுங்கள்.
- வீட்டில் இளை கூடாது தம்பி.
- கதைக்காதவன் வாயிருந்தும் ஊமையடா மகனே.
- பணம் இல்லாதவன் பிணம்.
- நல்லவர்களை தேடிச் செல் கெட்டவர்களை விட்டு விடு.
- விழுவது வெட்கமல்ல வீழ்ந்து கிடப்பதே வெட்கம்.
- செய் நன்றி மறவாதே!
- கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதியின் வாழ்வினிலே.....

பூவையருக்குள்ளே பூவாக மலர்ந்து

பூக்கள் பலவாகி பூத்துக் குலுங்கிடவே

பூக்கனிகள் நாட்டி பூங்கவை உருவாக்கி

பூங்காவனமாக பத்மலிங்கத்தின் மனைவியாகி

புகழ்ச்சி பலவாக பேசிடவே வைத்திட்டு

புதுமைகள் செய்து சரஸ்வதியாய் மிளிர்ந்து

கை வினைப் பயிற்ச்சியின் பங்கான ஆசிரியையாகி

கை விட்டு போனவுடன் கலை தனிலே ஈடுபட்டு

காண்போர் வியந்திட கடினமாய் உழைத்திடவே

பலநோக்கு கூட்டுறவில் பகுதிமுகாமை பெற்று

பல தரப் பட்டோர்க்கு பதிவுடனே உதவி செய்து

மக்கள் மதிப்புடனே மறவரின் அன்புடனே மக்களின் பெருமையை

யாவரும் அறிந்திடவே நாட்டுக் கூத்துடனே (காத்தவராயன் சிந்து நடை

கூத்து) நளின லயத்துடனே! பாட்டுக் கேற்றபடி பாவனைசெய்ததுடன்

போட்டி பல கண்டு பொருந்தமாய் வளர்த்திட்டு உற்றார் உறவுகள்

சுற்றத்தார் வியந்திடவே இற்றை வரை வாழ்ந்தது போது மெனத்தான்

எண்ணி இறைவன் பாதத்தில் இறைப்பாறுதல் கொண்டாயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் பத்மலிங்கம் சரஸ்வதி(பூங்காவனம்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

இயற்கை வளம் நிறைந்த இலங்கையில் எழில் மிக்க வன்னியில் தொன்மை வாய்ந்த எழில் மிகு கிராமம் முள்ளியவளை எனும் பதியில் மூத்தோர் குலமான விஷ்வப்பிரம்ம கோத்திரத்தில் கணபதிப்பிள்ளை நாகமுத்து தம்பதியினருக்கு இளைய மகளாக 1943ம் ஆண்டு வைகாசி மாதம் 20ம் திகதி சரஸ்வதி எனும் பெயருடன் வந்துதித்தார். மூத்த சகோதரி (அமரர்) அன்னப்பிள்ளை அண்ணன் (அமரர்.நாகராசா) ஆசாரி சின்னண்ணை (அமரர்) இரத்தினம்(ஆசாரி) ஆகியோரின் அன்பு தங்கையாக சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து தன் அக்கா அண்ணன்மார் ஒன்று விட்ட அண்ணன் (குழந்தை வேலு) ஆகியோருடனும் சேர்ந்து வாழ்ந்து வந்தார்.

இவர் தன் ஆரம்ப கல்வியை முள்ளியவளை சைவப் பாடசாலை (கலைமகள் வித்தியாலயம்) ஆரம்பித்து பின்பு மு/வித்தியானந்தாக் கல்லூரியில் திறம்பட தன் படிப்பைத் தொடர்ந்தார். பாடசாலையில் கல்வி கற்கும் போதே திறம்பட ஒழுக்கமும் படிப்பில் அதிக கவனமாகவும் படித்து முன் மாதிரியாகவும் திகழ்ந்தார். விளையாட்டிலும் அதிக ஆர்வமுடையவர். தன் கல்வியினை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் மருதனாமடத்திலுள்ள நெசவு சென்ரறிலும் தன் பணியை சிலகாலம் செய்து, வவுனியா கச்சேரியிலும் தன் பணியை திறம்படச் செய்து வந்த வேளை தன் தாயை இழந்து வந்தார். மீண்டும் தன் சொந்த இடமான முள்ளியவளைக்கு சென்று . தன் தந்தையின் சொல்படி யாழ்ப்பாணத் தில் மூத்தோர் குலமான விஷ்பபிரம்ம கோத்திரத்தில் தொழிலும், சொல்லிலும் குணத்திலும் உருவான சின்னத்துரை நாகரத்தினம் தம்பதிகளின் மூத்தமகனான பத்மலிங்கத்தை 1974ம் ஆண்டு மணம் முடித்துக் கொண்டார்.

பத்மலிங்கம் சரஸ்வதியருக்கு மகன்களாக பத்மசீலன், ஜெயசீலன். மணிமேகலன் என்னும் மூன்று மகன்களை பெற்று பெரியப்பன், சின்னப்பன், பவுணன் என செல்லமாக பெயர்சூட்டி மகிழ்ந் தார். பெண் பிள்ளை இல்லாத இவரிற்கு தன் அண்ணன் மகள்களை பெண் பிள்ளைகளாக நினைத்து பாசத்துடன் வளர்த்து வந்தார். இவ் வாறு ஆண்டுகள் நகர்ந்து கொண்டிருக்கும் போது 1975ம் ஆண்டு முதல் பலநோக்கு கூட்டுறவுசங்க முகமையாளராகவும் பின்பு கிளை முகாமையாளராகவும் பணிபுரிந்து பல சாதனைகளை செய்து வந்தார். அனைவரிடமும் பாசமாக பழகும் இவரை "சரசக்கா" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பார்கள். இவரும் சரசக்காவாகவே மாறி பலரது வேலை இவரது சேவை, தன்னுடைய வேலையினை திறம்படச் செய்து பலபேர் போற்றும் விதமாக நடப்பார் கூட்டுறவு தின விழா நடந்தால் ஆண்டு தோறும் நடக்கும் இவரது கிளை தான் முதலிடம் பெறும் பல பரிசில்கள் பல சாவல்கள் எல்லாவற்றையும் கடந்து தன் குடும்பத்தை தானே தன் தோழில் சுமந்து பிள்ளைகளையும் கணவரையும் தானே பார்த்து வந்தார். தன் பெறாமக்களான புனிதம், பெரியதம்பி, பெரியதங்கச்சி, சின்னத்தங்கச்சி, பாஸ்கரன், சத்தியன் இவர்களுடன் அதிகபாசத்துடன் இருப்பார். அண்ணன் பிள்ளைகள் மீதும் அதிக பாசம் கொண்டவர். அயலவர் சுற்றத்தாரிடமும் கருணையும் இரக்கமும் கொடுக்கும் மனமுடையவராகவும் திகழ்ந்த சரஸ்வதி ஊர் மக்களால் மிகுந்த மரியாதையுடையவராகவும் காணப்பட்டார் . இதனால் இவர் (பூங்கா வனம்) என்று செல்லமாகவும் அழைக்கப்பட்டார். இவர் தான் வாழ விடினும் மற்றவர்கள் மீது அக்கறை கொண்டவர்.

இவரும் இவர் அண்ணன் இரத்தினம்(வில்லுபாட்டு) போல் கலையினில் ஆர்வம் அதிகம், அதன் படியே இவர் ஒரு மறக்கமுடியாத சம்பவத்தினால் தன்னையும் கலையிலே இணைத்துக் கொண்டார். இவரின் இளைய மகனான ஜெயசீலன் சிறிது காலம் இல்லாது போக மனமுடைந்த இவர் அவரைத்தேடி அலைந்து திரிந்த வேளை ஒருமுறை இவர்தனது பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சென்றிருந்த வேளை வயதான மூதாட்டி இவரை தெருவில் கண்டு என்ன மகளே! நீ துன்பமாக இருக்கிறாயா? உன் மகனை தேடி கவலை பட்டிருக்கிறாய். உன் மகன் நாளை உன் வீடு தேடி வருவான் போ என்று கூறிவிட்டு மறைந்தார். அவ் மூதாட்டி சொன்னபடி மகனும் வீடு தேடி வந்தார். மனம் குளிர்ந்த இவர் அவ் மூதாட்டி வேறு யாருமல்ல கண்ணகி அம்மன் தான் என்று மகிழ்ச்சிய டைந்தார். அன்றிலிருந்து தான் ஆரம்பமானது இவரின் கலைப் பயணம். மாலைக்கு வாதாடிய மைந்தன் எனும் "காத்தவராயன் சிந்துநடனக் கூத்து" (முருகேசு) அண்ணாவியாரினால் 1992ம்ஆண்டு காட்டா விநாயகர் ஆலயத்தில் முதன்முதலாக முன்மாரியாகவும் பின்பு காளியாகவும் பாத்திர மேற்று நடித்துக் கொண்டார்.பின்பு பல கலைஞர் களையும் உருவாக்கி பெறாமகன், மருமகள்கள், பேரப்பிள்ளைகளையும் தன்னுடன் இணைத்து கலைத் தாகத்தை தீர்த்துக் கொண்டார். இத்துடன் நிற்கவில்லை இவரது கலைப் பயணம் அரிச்சந்திரா மயானகாண்டம், கோவலன் கண்ணகி கூத்து இவற்றிலெல்லாம் ஆர்வம் சக கலைஞர் களைக் கூப்பிட்டு நன்றி தெரிவித்து பாராட்டி அவர்களிடமும் இருந்து தானும் சிலவற்றை கற்றுக் கொள்வார். காத்தவராயன் சிந்து நடைக் கூத்து இவர் முன்மாரியாகவும் மறைந்த கந்தசாமி சிவனாகவும் நடித்த காட்சிகள் எல்லாம் என்றும் மறக்கமுடியாதவை எங்கெல்லாம் கலை விழாக்கள் நடக்கின்றதோ அங்கொல்லாம் இவரும் இருப்பார்.இவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க கிளைகளில் நடக்கும் வாணி விழா மற்றும் பிரியாவிடை நிகழ்வுகள் அனைத்திற்கும் இவரே தலைமையேற்று நடத்துவார். முள்ளியவளையில் தெரியாதவர் எவரு மில்லை பூங்கானக்கா! என்றால் கதைக்காதவர் எவருமில்லை. 22 ஆண்டுகளாக தனது பலநோக்கு கூட்டுறவு சங்க 1997ம் ஆண்டு சேவையினை நிறைவு செய்து இவர் தன் இளைய மகன் ஜெயசீலனுக்கு யாழ்ப்பாணத்தை சேர்ந்த கோவிந்தராஜா-ரதி தம்பதிகளின் மகள் புவனலோஜினிக்கு மணம் முடித்து வைத்து பேரபிள்ளைகள் நிரோஜன், தினேஸ், கிருஷிகன் ஆகிய மூன்று பேரப்பிள்ளைகளை கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார்.

இவ்வாறு காலம் ஓடிக்கொண்டிருக்கும் போது அசாதாரண சூழ்நிலையால் சொந்த ஊரை விட்டுசென்று பின் மீளவும் தன்னுடைய சொந்த இடமான முள்ளியவளைக்கு வந்து தன் கணவருடனும் இளைய மகனுடனும் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வந்த வேளை 2016ம் ஆண்டு தன்னை மார்பிலும் தோளிலும் சுமந்த தன்னுடைய சின்னனன்னை (இரத்தினம்) நோய்வாய்ப்பட்டு இறந்தார். இதனை தாங்கி கொள்ளாமல் சகோதரன் பாசம் இல்லாமல் தனி மரமானார். இக் கவலையில் இருந்து மீள்வதற்குள் தன் கணவரனான பத்மலிங்கமும் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்தபோது 13ம் திகதி 11ம் திகதி 2017ம் ஆண்டு கணவரையும் இழந்தார். பிள்ளைகளின் ஆறுதலுடன் இருந்து வந்த வேளை தன் அண்ணன், கணவன் ஆகியோரை இழந்த சோகங்களை தாங்க முடியாமல் மனவேதனையுடன் இருந்து வந்தார். தன் மகன் இருவரின் வாழ்க்கையைப் பற்றியும் நினைத்து நினைத்து மனம் நொந்தார். இவரின் மனக் குமுறலை தன் பெறாமகளாள் பரமேஸ்வரி (சின்ன தங்கச்சியிடம்) சென்று தான் கூறுவார் ஆனால் அவருமோ வெளிநாடு சென்று விட்டது அவரின் துரதிஷ்டமே! திடிரென நோயால் பாதிக்கப்பட்ட இவர் இளைய மகனுடனே வீட்டில் இருந்து வந்தார். அப்போது தன் பெறாமகளுடன் T.P மூலம் உரையாடி ஒருமுறையாவது உன்னை நேரில் பார்க்க வேண்டும் வந்து விடு சின்னத்தங்கச்சி என்று உள்ளம் குமுறுவார் ஆனால் அது நிறைவேறாமல் போனது, பெறாமகளிற்கும் தன் அன்ரி சித்தப்பாவை நேரில் காணமால் போனது வருத்தமே! தீடீரென வந்த நோயினால் பாதிக்கப்பட்ட இவர் மாஞ் சோலை ஆஸ்பத்திக்குக் சென்று சிகிச்சை பெற்று மீண்டும் வீடு திரும்பி இருந்த வேளை தன் கணவர் இறந்து 6ம்மாதம் கூட செல்லாத நிலையில் தன் பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளை, பெறாமக்கள் கண்முன்னே 30.04.18 அன்று (எந்த தாயின் காட்சி கண்டு தன்னை கலையில் அற்பணித்தாரோ.) அதே தாயின் நாளில் திங்கட்கிழமை காலை 9.05 மணியளவில் இறையடி சேர்ந்தார். தன் இரு பிள்ளைகளின் திருமணத்தை காணமலும் அவருக்கு ஆசி வழங்காமல் இறையடி சேர்ந்தது இவரின் துரதிஷ்மே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுத் துயர்

வளர்த்து பெருமைகளைத் தான் சேர்த்து முத்தான மூவரென மனிதர்களைச் சொல்ல வைத்து வித்துக்களாகவே விளை நிலத்தில் பதித்திட்டு கத்தும் கதறல் கொள்ள காணா தூரம் சென்றாயோ அம்மா!

**மகன் புலம்பல் (பத்மசீலன்)**

வாழ்ந்த காலமெல்லாம் வனப்பது குறையாமல் தாழ்ந்த நிலை மாற்றி தாயாகி சிறந்தவளே! வீழ்ந்த காலமதில் விடாது தூக்கியவரே உன் ஆழ்ந்த உறக்கத்தினால் அலையாகி நிற்கிறேனே அம்மா இந்த மண் மீதினிலே இனியெம்மை உன்போல் இன் முகத்துடன் வரவேற்பார் யாரம்மா?

**மகன் புலம்பல் (ஜெயசீலன்)**

ஆசையாய் எனைப்பெற்று அல்லல்கள் நீங்க வைத்து நேசமாய் அன்பு காட்டி நெறி முறை தவறாமலே தேசமே புகழ்ந்திடவே தென்புகளை தந்தவளே! பேசாது போன தாயே பெரு மூச்சுடன் கலங்குகிறேனே.

**அம்மாவை தேடுகிறேன் (மணிமேகலன்)**

அன்பான என் அம்மாவே அரவணைத்த தெய்வமே! இன்பம் தந்தவளே எனை இயன்ற வரை காத்தவரே துன்பம் மேலிடவே துயர் பகிர்ந்து கொள்ளும் நான் உந்தன் நிழல் தேடி உரு மாறிப் போகிறேனே அம்மாவே! தோளில் போட்டுக் கொண்ட தந்தையும் இங்கில்லை தொட்டுத்தான் பேசிக் கொள்ள தாயே நீயும் இல்லை நீ வாழும் காலமதில் எனக்கோ வாழ்க்கையோ கிடைக்கவில்லை. வந்து நீ உறவு கொள்ள வழி ஏதும் தெரியவில்லை. எல்லாம் கொடுத்தான் இறைவன் என்றிருந்தோம் எல்லா வளமும் நாயகியே பெற்றிருந்தாய் சொல்லும் நலமும் சுமைகளே உற்றிருந்தாய் எப் பிறப்பில் காண்பேன் சரஸ்வதி தாயே உனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மைத்துனர் புலம்பல் (குன ராஜா)**

அண்ணன் போன வழி நானும் போவேன் என எண்ணம் தான் கொண்டே எம்மை மறந்தவரே மண்ணுலக வாழ்வு மாயை என்று தானோ விண்ணுலகு சென்று விம்ம வைத்து சென்றீரோ! அம்மாவென உமை நினைத்து மச்சாள் என நான் அழைப்பேன் உம் மகன்கள் மணக் கோல காட்சிகளை காணுமுன்னே என் அண்ணனை காண்பதற்கு விண்ணுலகம் சென்றதேனோ!

**மருமகள் புலம்பல் (புவனலோஜினி)**

தாயாக இருந்தே தலை செய்த அன்புருவே சேயாக என்னை சேர்த்திட்ட மாமியாரே ஓயாமல் உங்களை உறவாகும் நினைவதிலே காயாமல் காத்து கலங்கி அழுகின்றேனே.

**பேரப்பிள்ளைகள் புலம்பல் (நிரோஜன் , டினேஸ் ,கிருஷிகன்)**

அப்பம்மா ஏன் எம்மை மறந்து போய் விட்டீர் தப்பொன்றும் செய்ய மாட்டோம். இப்போது உணர்ந்து விட்டோம் (தித்) திப்பாக பேசி இனி தீன் பண்டம் யார் தருவார் எப்போது வருவீர்கள் என்றே காத்திருப்போம் அப்பம்மாவே!

**பெறாமக்கள் புலம்பல்**

கலங்கும் கண்களுடன் காத்திருக்கும் எமக்கு சலங்கை ஒலியாக சகுதியிலே பேசியதை விலங்குபோட்டு விதிதான் பிரித்தாலும் துலங்கும் உம் நினைவு தூரமாகிப் போகாதே.

**மைத்துனி புலம்பல் (ஜெகதீஸ்வரி)**

சொந்த அண்ணாவை சொந்த மாக்கி தந்திட்டு வந்த உறவு என்று வாய் நிறைய வாழ்த்தி விட்டு பந்தம் இனி இல்லை என்று பாதியிலே சென்றவளே எந்த இடம் தேடி உன்னை நான் கண்டிடுவேன் மச்சாளே!

**உற்றார் உறவினர் புலம்பல்**

உறவுக்கு விளக்கமாய், ஊருக்கு விளக்காய், உண்மைக்கு உருவமாய், உன் அன்பில் சிறப்பாய் உன்னதமாய் வாழ்ந்தவளே உன் பிரிவு தாங்காமல் உறவினராய் கலங்கி உற்றாராய் தேடுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுற்றத்தார் புலம்பல்

கற்றத் தெளிந்து கலைமகளாய் திகழ்ந்து சுற்றம் சிறந்திடவே சூழ்நிலை மாற்றியவளே உன் பற்றும் பாசமும் பரவசமும் தந்ததினால் முற்றும் மறந்தவராய் முகம் சோர்ந்து வாடுகிறோம்.

### அன்ரியை தேடுகிறேன்

எனதருமை அன்ரியே போன மாத மதில் அடுத்தவன் சொல்லி நானறிந்த செய்தியது என்னவெனில் துயரம் சூழ வைத்து தூரதேசம் சென்றாய் என பாயுமிக் கண்ணீரோடு பதறியே நிற்கின்றேன் ஓயாது என் கவலை ஒருவாய் சோறு தரவில்லை. மனம் நிறைய என் தாயை இழந்திருப்பினும் தாய் போல் நீயிருந்து அடிக்கடி ஓடி வந்து பார்த்திடுவீரே கனடா போகும் போதும் முக மலர்ந்து வழியனுப்பி வைத்தீர்களே உங்களுடன் சித்தப்பாவும் நானும் வந்து பார்த்த போது எங்கே போனீர்கள் எனதருமை அன்ரியே, நம்பவில்லை உங்கள் இழப்புச் செய்தியை சித்தப்பா வந்து உங்களையும் கூட்டித் துணை சென்றாரோ, திரும்ப ஊர் வந்து நான் சேர்ந்தேன். இன்று உங்கள் முகம் காணாது பொழுது வீணாக போகுமென்று கனவிலும் எண்ணவில்லை. கொடும் பாவியாகி குளறி அழுகின்றேன். உங்களையும் சித்தப்பாவையும் காணாது நின்று அன்ரி.....அன்ரி என தேடுகின்றேன். இனி எப்போது நான் காண்பேன் உங்களையும் சித்தப்பாவையும் நான் வர முன்னமே அவசரமாய் உயிர் பிரிந்து விண்ணுலகம் செல்ல மனம் வந்ததேனோ ஆஸ்பத்திரியில் நீங்கள் இருக்க நான் இங்கே தனித்திருந்தும் விழித் திருந்தும் உம் செய்தி தான் கேட்டு ஓராறு கண்ணீர் விட்டெறிந்தேன் ஒரு வாய் சோறு கூட ஊட்டவில்லை இறுதி நேரம் தான் கூட வென்று என் பெயர் சொல்லி எத்தனை முறை தான் தேடினீர்களோ. இன்று வந்துள்ளேன் உங்கள் முன் முகம் பார்க்க முடியவில்லை இனி என்ன செய்வேன். நான் இங்கே என் வேதனை என்ன வாயினும் காலனவன் உமையணைத்தது கால நியதியே தான் ஆதலினால் உங்கள் ஆத்மா சிவபதமடைந்து ஆத்மா சாந்தியடைய வேண்டி இறைவனை பிராத்திக்கின்றேன்.

ஓம்! சாந்தி சாந்தி! சாந்தி!

**பெறாமகள்**
**பரமேஸ்வரி (சின்னத்தங்கச்சி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பியின் கண் கலங்கள்

தம்பி தம்பி யென்று என்னை நம்பியிருந்த உடன் பிறவாச் சகோதரிக்கு உதவ என்னால் முடியாமல் போய் விட்டது. ஆறு மாதங்களுக்கு முன் தனது கணவரை இழந்தார். அன்று தொட்டு இவருடைய வாழ்க்கை கலங்கிய நீர் போல குளம்பி விட்டது. கலங்கிய கண்களோடும் குளம்பிய மனத்தோடும் வாழ்ந்து வந்தார் . வடிவாக உணவு உண்ணவில்லை, விடிந்தொளும் போது முகம் கழுவுவதில்லை, உறங்குவதில்லை, உற்றா ரோடு வடிவாகப் பேசுவதில்லை, கனவில் கண்ட காட்சிகள் எல்லாம் கலைந்தன நினைத்த நினைவுகள் எல்லாம் நிலைமோதி மறைந்தன நிறை குறைந்தது உடல் சிறுத்தது நிறம் மங்கியது நின்மதியும் மனதை விட்டு அகன்றது, காலம் சென்ற கணவரேடு சென்று விடுவதுதான் சரியான வழி என்று எண்ணினார். இதனால் உண்ணாமல் இருந்தார், உறங்காமல் இருந்தார், உற்றாரோடு பிளங்காமல் இருந்தார், விபூதி பூசினார், திருமுருகாற்றுப்படை ஓதினார், சிவனை நாடினார், தேவரம் பாடினார், சிவலோகம் சென்ற கணவனைக் காண சிவபதமடைந்தார். மோட்சம் எனும் சாம்ராச்சியத்தின் ஆட்சிப் பிரமாம் சிவலோகம் எங்கள் தங்கை அடைந்து விட்டதாக எண்ணி சிவபுராணம் படிக்சின்றோம். சிவனுக்கு அர்ச்சினை செய்கின்றோம், பூ மாலை கொடுக்கின்றோம், பாமாலை படிக்கின்றோம். வற்றத அருள் சுரக்கும் ஒற்றாப்பளை அம்மாளின் கருணையோடு காரியங்களை நிறைவேற்றும் கணபதியின் அருளோடு முத்தமிழை அள்ளிதந்த முருகனின் துணையோடு சிவபதம் அடைந்திருப்பார் என்றே நம்புகின்றோம். அவர் ஏற்றிய நெய்விளக்குகள் இப்போ சிவலோகத்தில் தேவர்கள் ஏற்றுவார்கள். அவர் செய்த அருச்சினை அவரின் பிரச்சினைகளைத் தீர்த்திருக்கும், அவர் பிடித்த விரதங்கள் உங்கள் வாழ்வில்உங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய நாங்கள் எல்லோரும்**
**பிரரார்த்திக்கின்றோம்.**
**பொ.சொர்ணலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டி அம்மாவை தேடுகிறோம்

பூங்காவனம் எங்கள் பூட்டி அம்மா
நீர் எங்கே போனீர் அம்மா
உம் பிரிவால் துயர் உற்று தடுமாறி -நாம் இங்கே
கலங்கி நிற்கின்றோம் அம்மா
எம்குலத்து மூத்த பூவே நீரும் உதிர்ந்து போனீரோ
உம்மை பற்றி என் தாய்க்கு அவர் தாய்
கூறியதை என் தாய் எனக்கு சொன்னாரம்மா

சரஸ்வதி என்ற திரு நாமம் கொண்டு
கலைகளிலே பேரானந்தம் கண்டு
காத்தவராயன் எனும் சிந்து நடனக் கூத்தை
தன் அகவை ஐம்பதில் மாரியம்மனாகவும்
காளியாகவும் நடித்துக் காட்டிநீர் அம்மா

பலநோக்கு கூட்டுறவுச் சங்கமதில்
பணியாற்றி பல நன்மை செய்தீரே!
பண்பான பேச்சும் பகிடியான பல கதையும்
அன்பாகப் பேசி என்னை அரவணைத்துக் கொள்வீரே

என்மீது அன்பு கொண்டு
கோபி கோபி என்று பிள்ளையார் அப்பாஎன்றும்
அன்புடன் உறவாடிய பூட்டி நீர் எங்கே?
உமது சொல் வன்மை எங்கே?

உமைத்தேடி வருவோரின் பசியாாற்ற உணவளித்தீர்
நீர் ஒரு வாய் உண்ணாமல் போன தென்ன?
வருவோரின் பசியாற்றிய தாயே?
பசியோடு நீர் போனதென்னம்மா?

பின்னிட்ட காலங்களில் இப் பூவுலகில் நீர்பட்ட துன்பத்தை
எம்மால் காண முடியவில்லை
உம் பிள்ளைகள் உமக்கு களைக்காது பணியாற்றி
பெண் பிள்ளை இல்லாக் குறை தீர்த்தாரம்மா!

உம் மணவாளன் உம்மை விட்டு பிரிந்து
ஐந்து திங்கள் சென்ற போதும் அத்துயர்தாளாது
அவருடன் நீரும் போனீரோ? உம் துயரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்பி வெதும்பி நாம் வாடுகின்றோம் என்று தான்
இவ்வுலகம் நீர் தொடுவாய் என காத்திருக்கின்றோம்.
பூங்காவனம் பூட்டியம்மா!
உமது ஆத்மா சாந்தியடையட்டும்

**மேனன் -கோபி**
**(பூட்டப்பிள்ளைகள்)**

## வவா மாமியை தேடுகிறோம்

குடும்பத்தின் குலவிளக்கே வீடு நிறைந்த லஷ்மியாய் இருந்தீர்களே பண்பிலும் அன்பிலும் செல்வதியாய் வாழ்ந்தீர்களே. எங்களைக் கண்டால் மிகவும் ஆனந்தமாக புன்சிரிப்புடன் ஓடி வந்து கட்டித் தழுவுவீர்களே இப்போ எங்களை யார் வரவேற்பார்கள். தங்கச்சி பிள்ளை கள் என்று சொல்லும் வார்த்தைக்கு மறு பேச்சு கிடையாது அப்படி இருந்தீர்கள் எம்முடன் நீங்கள் நோய்வாய்ப்பட்டு இருந்த நேரம்தொட்டு நாங்கள் மனம் ஒடிந்து போய் விட்டோம்.அண்ணாவை பிரிந்து 6 மாதம் முடியு முன்னே நீங்களும் அவருடன் சென்று விட்டீர்களே. அவர் மேல் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறீர்கள் என்பது உங்கள் மறைவிலேயே தெரியுது. மச்சாள் சுபாசினி, கிரிசாந்தினி என்றால் உங்களுக்கு எவ்வளவு பிரியம் பிள்ளைகளையும் அடிக்கடி விசாரிப்பீர்கள். எங்களுக்கு எவ்வளவு கதைகள், காத்தவராயன் கூத்து நாடகங்கள் எல்லாம் சொல்லியும் நடித்தும் காட்டியிருப்பீர்கள் மாமி நாங்கள் உங்களை என்றும் மறக்கவே முடியாது. காலத்தின் கொடுமையால் நோய்தொட்டு உங்களை வாட்டிவதைத்து உயிரையும் குடித்து விட்டது. நாம் ஒரு நாளும் நினைக்க வில்லை மாமிக்கு இந் நிலை வருமென்று எங்களுடைய பிள்ளைகளை யும் (அபிராமி , சாய்நராத் , சந்தோஷ் , விஷால்) எவ்வளவு அன்புடன் ஆரத் தழுவி அணைத்து அறிவுரைகள் பல கூறி மகிழ்ந்திருப்பீர்கள். உங்கள் கம்பீரமான தோற்றமும், உத்தியோகமும், நேர்த்தியான நடையும் பண்பான பேச்சும் ஒரு தனியழகுதான் ஊருக்கு பல சேவைகள் செய்திருக்கிறீர்கள். பல குடும்பங்களை முன்னேற்றியிருக்கிறீர்கள். மண்ணில் பிறந்த ஒவ்வொரு உயிரும் எண்றோ ஒரு நாள் மண்ணில் மடிவது திண்ணம், ஆனால் இருக்கும் காலத்தில் என்ன செய்தோம் என்பது தான் கேள்வி அந்த வகையில் மாமி அளவுக்கு அதிகமாகவே செய்துள்ளார். இந்த புண்ணியமே ஆத்மா சாந்தியடைய வழிவகுக்கும். மாமியின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**பிரிவால் துயருறும்**
**அருளானந்தன் வவி குடும்பம்**
**கிரிதரன்-சுபாசினி குடும்பம்**
**சந்திரகுமார்- கிருஷாந்தினி குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனிக்கு ஓர் இரங்கள்

கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று சொல்லுவார்கள் அந்த வாக்கிற்கு அமைய எமது அண்ணி எங்கும் சென்றலும் மரியாதைக்குரியவராக காணப்பட்டார். ஒரு நாளும் மற்றவர் உள்ளம் புண்பட நடக்கமாட்டார். அவரின் பேச்சு, நடை, உடை, பாவனை என்பவற்றால் எல்லோரையும் கவரக்கூடியவர். அவர் தனது சுற்றத்தாரையும் கணவரின் உறவுகளையும் பெரிதும் மதித்து கண்ணியத்துடன் நடந்தவர். அப்பன் ராசா என்று தான் எம்மை அழைத்து கதைப்பார். ஒருபோதும் எம்மை வன்மையாக பேசியதில்லை நல்லவர்களுக்கு தான் பூமியில் இருக்க கொடுத்து வைக்கவில்லை போலும். முதலிலும் எம் அண்ணன் எம்மை விட்டு பிரிந்து துயரம் இன்னும் ஆறவில்லை அடுத்து அண்ணியும் அவர் அவர் வழியே சென்று விட்டார் . அண்ணனின் மறைவுடனே அண்ணிக்கும் நோய் பிடித்து விட்டது யோசனை துக்கம் எல்லாம் சேர்ந்து படுக்கையாகி இறைவனடி சேர்ந்து விட்டார். எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் நாம் இப்படிப்பட்டவர்களை காண்பது அரிது. இப்பிறப்பில் எமக்கு நல்ல அண்ணி கிடைத்தமைக்கு இறைவனுக்கு நன்றி சொல்கிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைந்து நற்பேறு கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


**பிரிவால் வாடும்**
**நவரட்ணராஜா குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிளை முகாமையாளர் (ஊழியர்களுடன்)




மருமகளுடன் அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைத்தாயின் பொக்கிஷங்கள்




அமரர் கந்தசாமியுடன் (அமரர் சரஸ்வதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமைத் தோற்றம் -



முன்மாரியாக அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேத்தியுடன் அமரர்.



பெறாமகன், பேர்த்தியுடன் அமரர்



கிளை முகாமையாளராக அமரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 1943 - 05 - 20

இறப்பு 2018 - 04 - 30

முள்ளியவளையை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## பத்மலிங்கம் சரஸ்வதி (பூங்காவனம்)

( முன்னாள் கரைத்துறைப்பற்று பல.கூ.சங்க முகாமையாளர் )

---

*பூவுலகில் கருவாகி இன்று*
*சாவுதனை அணைத்து*
*விட்டு உதிர்ந்த மலரே......!*
*பிறப்பதும் இறப்பதும் நிஜம்*
*என்று இருப்பினும்*
*மறந்திட முடியாமல்*
*மருகுதே எம் மனம்*
*சிறகுகள் விரித்தே நீர்*
*கூடு விட்டு பறந்ததேன்*
*உறவுகள் நிலை குலைய*
*பிரிந்தே போனதேன்....!*

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!*

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்**
**பிரார்த்திக்கின்றோம்**

---

பிரிவால் துயருறும்
ஐங்கரன் கரும்பொன் கலையகம்,
குருமன்காடு, வவுனியா.

பொய்கை, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
1943
05
20



மறைவு
2018
04
30

## அமரர். பத்மலிங்கம் சரஸ்வதி

(முள்ளியவளை கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க நிர்வாக உறுப்பபினர்
திரு. ப.மணிமேகலன் அவர்களின் அன்புத்தாய்)

நித்திய தூக்கத்தில் உங்கள் விழிகள்
நீங்காத துயரமதாய் உங்கள் நினைவுகள்
துடித்து துவள்கின்றோம் சோகத்தில்
நேற்றுப்பார்த்த முகம், நேற்றுக்கேட்ட குரல்
யாவும் காற்றில் ஆடி வரும் கீதமென
மாறி மாறியே எம்மன வானில் வந்து செல்கின்றது
மரணம் என்பது நியதிதான் - ஆனால்
இது தருணம் இல்லையே உமக்கு.

*அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*பிரிவால் துயருறும்*
முள்ளியவளை கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கம்
முள்ளியவளை

[illegible] அச்சகம் [illegible] 0771601076



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவுக்காய்

1. நிகற்புகம் எனப்படுவது எத்தனை ?
2. அருணகிரிநாதர் எந்த ஊரில் அவதரித்தார் ?
3. கம்பளிக்காக வளர்க்கப்படும் ஆடுகளுக்கு பெயர் என்ன ?
4. உலக அமைதிக்கான நோபல் பரிசு யாரால் சிபாரிசு செய்யப்படுகிறது ?
5. "கருடா" என்ற பெயர் கொண்ட விமானசேவை எந்த நாட்டில் இருந்து இயங்குகிறது ?
6. வெங்காயத்தில் அதிகமுள்ள வைட்டமின் எது ?
7. மனிதனைப்போல் தலையில் வழுக்கை விழும் குரங்கு எது ?
8. முதல் மோட்டார் ரோடுரோலர் எந்த நாட்டில் தயாரிக்கப்பட்டது?
9. செலினியம் செல்" என்ற போட்டோ முறையை கண்டுபிடித்தவர் யார்?
10. உயிரியல் கவிஞர் என்றழைக்கப்படுபவர் யார் ?
11. திருவள்ளுவரின் மனைவி பெயர் என்ன ?
12. செஞ்சிக்கோட்டை எந்த மாவட்டத்தில் உள்ளது ?
13. ஜப்பான் மீது வீசப்பட்ட முதல் அணுகுண்டு எது ?
14. ஆப்கானிஸ்தானின் தலைநகரம் எது ?
15. இந்திய தேசியக்கொடியில் காவி நிறம் எதைக் குறிக்கின்றது ?
16. "நிக்கல்" உலோகத்தை கண்டறிந்தவர் யார் ?
17. போர்ஸின் கோபுரம் எங்குள்ளது ?
18. அயோடின் நம் உடலில் எந்தெந்த இடத்தில் உள்ளது ?
19. "சகமா" எனப்படும் அகதிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் ?
20. "தி கைடு " என்ற நூலின் ஆசிரியர் யார் ?
21. இந்தியாவின் "மாக்கிய வெல்லி"என்று அழைக்கப்பட்டவர் யார்?
22. எகிப்திய நாகரிகம் எங்கு தோன்றியது ?
23. .அசோகரின் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் எந்த எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கின்றன ?
24. ஒரு மின்னலின் சராசரி நீளம் என்ன ?
25. பாம்புகளே இல்லாத கடல் எது ?
26. பென்சில் தயாரிக்கப்பயன்படும் மூலப்பொருட்கள் எவை ?
27. காளான்களில் எத்தனை வகைகள் உள்ளது ?
28. கங்கையும் யமுனையும் கூடும் இடம் எது ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. ஒருவர் மிகக்குறைந்த ஒலியை எங்கு கேட்க முடிகிறது ?

30. இந்தியாவின் மக்கள் தொகையில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக உள்ள மாநிலம் எது ?

### பதில்கள்

1. 100 கோடி
2. திருவண்ணாமலை
3. மரினோ
4. நார்வே அரசு
5. இந்தோனேஷியா
6. வைட்டமின் "பி"
7. ஆண் குரங்கு
8. இங்கிலாந்து
9. எர்னஸ்ட் வெர்னர்
10. சர் ஜெகதீஸ் சந்திர போஸ்
11. வாசுகி
12. விழுப்புரம்
13. லிட்டில்பாய்
14. காபூல்
15. தியாகம்
16. கிரான்ஸ்டட்
17. நாங்கிங்
18. தைராக்ஸின்
19. பங்காளதேஷ்
20. கே.ஆர்.நாராயணன்
21. சாணக்கியர்
22. நைல் நதிக்கரையில்
23. பிராமி
24. 6 கி.மீ
25. அட்லாண்டிக் கடல்
26. காரியம் , களிமண், மரக்கூழ்
27. 70 ஆயிரம் வகைகள்
28. அலகாபாத்
29. பாலைவனத்தில்
30. கேரளா

ஆதாரம் : தமிழ்நாடு திறன் மேம்பாட்டு பயிற்சி மையம்

நன்றி இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

*சின்னத்துரை + *நாகரத்தினம்

*கணபதிப்பிள்ளை + *நாகமுத்து

**பத்மலிங்கம் (வவா)**

கனாகாம்பிகை

யோகாம்பிகை

குணராணி

நவரட்ணராஜா

லலிதா

தனராஜா

கலாரஞ்சினி

* அன்னப்பிள்ளை

* நாகராசா

* இரத்தினம்

சரஸ்வதி

பத்மசீலன்

ஜெயசீலன்
\+
புவனலோஜினி

நிரோஜனன்

தினேஸ்

கிருஷிகன்

மணிமேகலன்

நாகப்பர் குழந்தைவேலு (உடன்பிறவா சகோதரர்)

* அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவியாய் திகழ்ந்து பேரும் புகழும் ஈட்டி எமக்கு நல்வழிகாட்டி எம்மை வாழ்வில் உயர்த்தி கண்ணை இமை காப்பது போல் காத்து நின்ற

**அமரர் பத்மலிங்கம் சரஸ்வதி (பூங்காவனம்)**

எனும் நாமம் பெற்ற அன்னையாகிய எம் குடும்பத் தலைவியின் மறைவையொட்டி செய்தி செவியால் கேட்டும் உரிய நேரத்தில் ஓடி வந்து எம் துயரில் பங்கு கொண்டும் வேண்டிய உதவிகள் செய்து அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எம் துயரில் பங்கு கொண்ட அன்புள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், வெளி நாடுகளிலிருந்து தொலைபேசி மூலமும், மின் னஞ்சல் மூலமும் அனுதாபம் தெரிவித்த கடல் கடந்த நெஞ்சங்களிற்கும் கடிதங்கள் மற்றும் தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கவிதைகளைத் தொகுத்துத் தந்த யாழ் (ஆதவன்) அவர்களுக்கும் நன்றி. அன்னாரின் ஆத்மா சாந்திக்காக அனைத்துக் கிரியைகளையும் செய்த குருக்களுக்கும், இந்நிகழ் வில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் இந் நினைவு மலரினை அச்சிட்ட SSRajah Printers அச்சக உரிமையாளருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நன்றி

**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## அம்பாளின் அற்புதங்கள்

பண்டு பாலர்க்குக் காட்சி கொடுத்ததும்
பழைய வேப்பம் படவாள் தளிர்த்ததும்
வண்டு மேவுப னிச்சைய தாடலும்
வன்பறங் கியைக் காயா வெறிந்ததும்
மொண்ட நீரில் விளக்கை யெரித்ததும்
மோது குட்டரோ கந்தனைத் தீர்த்ததும்
கண்டு பற்றக்கள் ளன்கண் கவர்ந்ததும்
சுருது சிற்பனுக் கேகண்க ளீய்ந்ததும்
அண்டர் போற்றுமுன் னாயிரங் கண்களை
அன்று பிள்ளைகள் காணக்காண் பித்ததும்
விண் டெழுந்திரு வேப்பம ரத்தினால்
மேவு பேய்பிணி யோய்வுறத் தீர்த்ததும்
மண்டு மாமழை தன்னி னைந்துநீ
மடங்க டோன்ற வரமளித் திட்டதும்
கொண்டு நந்திக் கடற்கரை கோயிலாய்
குலவு கண்ணகை யற்புதங் கோடியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
S.S.Rajah Printers, T.P. : 0777165589